**லங்கா ஹொஸ்பிடல் கோப்பரேசன் பிஎல்சி கம்பனி – 2017**

----------------------------------------------------------------------------------------------------------------

லங்கா ஹொஸ்பிடல் கோப்பரேசன் பிஎல்சி கம்பனியினதும் (''கம்பனி''), கம்பனி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய கம்பனியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

2017 யூன் 28 இல் நடாத்தப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் KPMG இனைக் கம்பனி நியமித்ததிலிருந்து KPMG (பட்டயக் கணக்காளர்கள்) - தனியார் கணக்காய்வு நிறுவனமொன்றினால் லங்கா ஹொஸ்பிடல் கோப்பரேசன் பிஎல்சி கம்பனியின் கணக்காய்வு அபிப்பிராயம் வழங்கப்பட்டது. 2018 மார்ச் 28 இல் KPMG தெளிவான அபிப்பிராயமொன்றை வழங்கியிருந்தது.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சான்றுகளின்மை

நேரடியான உறுதிப்படுத்தல்கள் காணப்படாமை காரணமாக, முறையே ரூபா 39,010,453 மற்றும் ரூபா 25,451,099 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களின் துல்லியத்தன்மை மற்றும் உள்ளதன்மையினை கணக்காய்வில் அறுதியிட முடியாதிருந்தது.

### 2.3 இணக்கஞ்செய்யப்படாத மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோரொருவருக்கு செலுத்த வேண்டியதாக பேரேட்டுக் கணக்கில் ரூபா 12,941,033 தொகையொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய கடன்கொடுத்தோரினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 41,212,069 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், ரூபா 28,271,036 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோரிடமிருந்து பெறவேண்டியதாக பேரேட்டுக் கணக்கில் ரூபா 49,911,604 தொகையொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய கடன்பட்டோரினால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 49,815,576 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், ரூபா 96,028 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முற்செலுத்துகையின் பேரேட்டு மீதி ரூபா 66,678,662 ஆகக் காணப்பட்ட போதிலும், பட்டியலின் பிரகாரம் அது ரூபா 59,927,474 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், ரூபா 6,751,188 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் E-Channeling விற்பனைகள் பெறவேண்டியவைகளின் மீதி ரூபா 5,738,910 ஆகக் காணப்பட்டதுடன் வைத்தியசாலை தகவல் முறைமையின் பிரகாரம் அது ரூபா 5,771,762 ஆகக் காணப்பட்டது. ஆகையினால் ரூபா 32,852 வித்தியாசமொன்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 2.4 நீண்டகாலம் நிலுவையாகவுள்ள ஏற்பாடுகள்

மீளளிப்புச்செய்யக்கூடிய வைப்புக்கள் மற்றும் முற்பணங்களின் ரூபா 3,859,683 தொகையான மீதியொன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டிராது நீண்டகாலப்பகுதியொன்றுக்கும் அதிகமான மீதிகீழ்க்கொண்டு வரப்பட்டிருந்தது.

## 2.5 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வு விடயங்கள்

குறித்த தொடர்புடைய துறைக்கு அவர்களின் பதவியணியினரில் விசேடத்துவம்வாய்ந்த வைத்தியர்களினை கம்பனி கொண்டிருந்த அதேவேளை மீளாய்வாண்டின்போது சில விசேடத்துவம்வாய்ந்த பரப்புக்களுக்கு பணியமர்த்தப்பட்ட நிபுணர்களுக்கு தந்திரோபாய வைத்தியர் கட்டணமாக ரூபா 99,300,000 தொகையொன்றை கம்பனி செலுத்தியிருந்தது.

வைத்தியசாலை அவர்களினை முழுநேர ஊழியரொருவராக ஆட்சேர்ப்புச் செய்யவேண்டுமாக இருந்தால் அது நிறுவனத்திற்கு அதிக கிரயமானதாகக் காணப்படுமென, இந்த பிரச்சினை தொடர்பில் தலைவர் கருத்து தெரிவித்திருந்தார். வைத்தியசாலை உத்தியோகத்தர் ஆளணியினரில் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், இரண்டு கதிரியக்க நிபுணர்கள் மற்றும் இரண்டு மயக்கமருந்து நிபுணர்களினை உள்ளடக்கிய ஐந்து நிபுணர்களைக் கொண்டுள்ளது. மருத்துவ துறையிலுள்ள விசேடத்துவம்வாய்ந்தவர்களின் எண்ணிக்கை மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் கையாளப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கையினை கருத்திற்கொள்ளும்பொழுது சம்பளப்பட்டியலிலுள்ள ஒரு அறுவைச் சிகிச்சை நிபுணர் மூலம் மாத்திரம் இந்த அறுவைச்சிகிச்சைகளினை நடாத்துவதற்கு சாத்தியமற்றதாகக் காணப்படுகின்றது. மயக்கமருந்து நிபுணர்கள் மற்றும் கதிரியக்க நிபுணர்கள் ஆகியோர் ஆரம்ப நிபுணர்களுக்கு உதவிகளினை வழங்குகின்றனர். 2017 ஆம் ஆண்டில் இந்த நிபுணர்களிடமிருந்து வைத்தியசாலை உழைத்த மொத்த வருமானம் எல்கேஆர் 1.29 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது.

## 2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பொது முயற்சிகள் சுற்றறிக்கை பிஈடி/1/2015 இன் ஏற்பாடுகளுக்கு முரணாக, பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் / பிரதம நிதி உத்தியோகத்தருக்கு முறையே 50 லீற்றர் மற்றும் 35 லீட்டரினால் எல்லைகளினை மிகைத்து கம்பனியினால் எரிபொருள் படிகள் அளிக்கப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், கம்பனியின் ஒத்த பிரிவுகளின் தொகைகளுடன் சமமாக இருக்கவேண்டிய எரிபொருள் உள்ளடங்கலாக வேட்பாளர்களின் மொத்த ஊதியம் பேரம்பேசிக் காணப்படுகின்றதுடன், அவை ஏனைய பொது பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகளினால் வழங்கப்படுகின்றவற்றுடன் ஒத்ததாகக் காணப்படுகின்றது எனவும் தலைவர் அறிவிருத்திருந்தார்.

# 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியினதும் தொகுதியினதும் தொழிற்பாடுகளினை அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான கம்பனியினதும் தொகுதியினதும் முறையே ரூபா 826,755,121 மற்றும் ரூபா 1,081,453,938 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் முறையே ரூபா 834,876,233 மில்லியன் மற்றும் ரூபா 922,047,400 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாகத்தை விளைவித்திருந்தமையால், லங்கா ஹொஸ்பிடல்

டயக்நொஸ்டிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் மந்தமான செயலாற்றல் காரணமாக, ஆண்டின் போது 14.7 சதவீதத்தினால் குறைவடைந்த வரிக்கு முன்னரான தொகுதி இலாபத்தினை சுட்டிக்காட்டுகின்றது.

2018 ஏப்ரல் 1 இல் இருந்து அமுலுக்குவந்த வருமான வரி விகிதத்தில் மாற்றங்கள் காரணமாக ரூபா 274 மில்லியன் பிற்போடப்பட்ட வரி சரிப்படுத்தலின் விளைவொன்றாக, கம்பனி மட்டத்தில், வரிக்கு முன்னரான இலாபம், 1 சதவீதத்தினால் சற்று அதிகரித்திருந்ததுடன் ஆண்டிற்கான தொகுதியின் இலாபம் 40.24 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், தாய்க் கம்பனியின் உரிமைப் பங்குதாரர்களுக்கான இலாபம் 69 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 269 மில்லியனால் குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு நிதிசார் மீளாய்வு

### 3.2.1 நிதிசார் விளைவுகளின் பொழிப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பல்வேறு கட்டங்களில் நிதிசார் விளைவுகளின் பொழிப்பொன்றை பின்வரும் அட்டவணை தருகின்றது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | | | |
|---|---|---|---|---|
| | 2017 ‘000 | | 2016 ‘000 | |
| | கம்பனி ரூபா. | தொகுதி ரூபா. | கம்பனி ரூபா. | தொகுதி ரூபா. |
| வருமானம் | 5,225,553 | 6,382,058 | 4,902,083 | 5,886,442 |
| சேவைக் கிரயம் | (2,936,768) | (3,519,257) | (2,680,770) | (3,099,004) |
| மொத்த இலாபம் | 2,288,786 | 2,862,801 | 2,221,313 | 2,787,437 |
| ஏனைய வருமானம் | 161,467 | 51,981 | 58,468 | 52,543 |
| நிர்வாகச் செலவினங்கள் | (1,232,814) | (1,549,695) | (1,116,309) | (1,379,607) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினங்கள் | (539,116) | (636,519) | (502,043) | (561,752) |
| முதலீட்டு ஆதனத்தின் முகப்பெறுமதியில் மாற்றம் | 14,000 | - | 8,000 | - |
| நிதி வருமானம் | 142,553 | 193,480 | 157,326 | 182,832 |
| வரிக்கு முன்னரான இலாபம் | 834,876 | 922,047 | 826,755 | 1,081,454 |
| வருமான வரிச் செலவினம் | (304,604) | (341,197) | (93,371) | (109,429) |
| ஆண்டிற்கான இலாபம் | 530,272 | 580,850 | 733,384 | 972,025 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 வங்கியிலுள்ள காசு

ரூபா 48,418 தொகையான தீர்த்துவைக்கப்படாத வங்கி பிழைகள் நீண்டகாலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக வங்கி இணக்கக்கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 4.2 வீஏரீ (VAT) திரும்பல்களுடனான வருமான இணக்கம்

கம்பனி வீஏரீ திரும்பல்களில் காட்டப்பட்ட மொத்த விநியோகத்துடன் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மொத்த வருமானத்தை இணக்கஞ் செய்திருக்கவில்லை.

எவ்வாறாயினும், மெத்தை (bed) வாடகைகள் மற்றும் தொழில்சார் கட்டணங்களாக பிரதானமாக பெயரிடப்பட்ட வீஏரீ பொறுப்புடைய விநியோகித்தல் இரண்டு மூலக்கூறுகள் காணப்பட்டதன் காரணமாக என கம்பனியின் தலைவர் அறிவித்திருந்தார். ஆனால் வைத்தியசாலை வருமானத்திலிருந்து, மெத்தை வாடகைகளின் மீது மாத்திரம் வீஏரீ பொறுப்பு இனங்காணப்பட்ட அதேவேளை ஆலோசனையாளர் கட்டணங்கள் வைத்தியசாலை வருமானத்தின் பகுதியாகக் காணப்படாததுடன் வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இரண்டிற்குமான சேகரிப்பாளரொருவாக செயற்படுகின்றது. ஆனால் வீஏரீ திரும்பலில் அவர்கள் மொத்த விநியோகத்தின் பெறுமதியினை உள்ளடக்க வேண்டியிருந்ததுடன், ஆகையினால் தொழில்சார் கட்டணங்களின் மொத்தத்தினைக்கூட அவர்கள் கருத்திற்கொள்ளல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் ஆலோசனையாளர்களுடன் வருமான பகிர்ந்தளிப்பு உடன்படிக்கைகளினை (உதாரணம்: பல்லுக்குரிய / பணியாளர் கட்டணங்கள்) கொண்டிருந்ததிலிருந்து அந்த இரண்டு தொகைகளின் இணக்கப்பாடு நடைமுறைக்கேற்றதாகக் காணப்படவில்லை. இந்த உண்மைகூட 2016 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த திரும்பலினை சமர்ப்பித்த நேரத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் மற்றும் 2018.01.09 இல் ஐஆர்டி ஈணையாளர் நாயகத்துடன் நடாத்தப்பட்ட தனியார் சுகாதார பாதுகாப்பு கழக கூட்டத்தின் போது இணங்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், ஏற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான உடன்படிக்கையினை மெய்மையாய்வுசெய்ய கணக்காய்விற்கு கணக்காய்வுச் சான்று கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.